**செ.வெ.எண்:44** **நாள்:17.11.2018**

**கரூர் மாவட்டம்**

**கடவூரில் கஜா புயலால் பாதிக்கப்பட்டுள்ள 145 குடும்பங்களை சார்ந்த பயனாளிகளுக்கு ரூ.8,38,100 மதிப்பிலான நிவாரண உதவிகளை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் இன்று (17.11.2018) வழங்கினார்.**

கரூர் மாவட்டம், கடவூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கஜா புயலால் பாதிக்கப்பட்டுள்ள 145 குடும்பங்களை சார்ந்த பயனாளிகளுக்கு ரூ.8,38,100 மதிப்பிலான நிவாரண உதவிகளை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (17.11.2018) வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

கரூர் மாவட்டத்தில் கஜா புயலால் பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. அந்த வகையில் பாதிக்கப்பட்டுள்ள வீடுகளாக நேற்று வரை கணக்கெடுக்கப்பட்டுள்ள 145 குடும்பங்களை சேர்ந்தவர்களுக்கு தலா ரூ.5,200 ரொக்கத்தொகை, அவரவர் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டதற்கான ஆணைகளும், ஒரு வீட்டிற்கு 10 கிலோ அரிசி, வேட்டி-சேலை, போர்வை என மொத்தம் ரூ.5,780 மதிப்பிலான நிவாரண உதவிகள் இன்று வழங்கப்பட்டுள்ளது.

இன்றைய கணக்கெடுப்பின்படி 528 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. அந்த பயனாளிகளுக்கும் விரைவில் நிவாரணத்தொகை மற்றும் நிவாரண பொருட்கள் வழங்கப்படும். கரூர் மாவட்டம் முழுவதிலும் 832 மின்கம்பங்களும் 9 மின்மாற்றிகளும் சேதமடைந்துள்ளதாக கணக்கெடுக்கப்பட்டுள்ளது. மீட்புப்பணிகளில் வருவாய்த்துறை, வளர்ச்சித்துறை நகராட்சிகள் துறை, பொதுப்பணித்துறை உள்ளிட்ட அனைத்துத்துறைகளைச் சேர்ந்த 637 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கரூர் மாவட்டம் முழுவதும் 23 கிராமங்களில் 428 ஹெக்டேர் பரப்பளவிலான வாழை, முருங்கை மற்றும் மரவள்ளிக்கிழங்கு உள்ளிட்ட பயிர்கள் சேதம் அடைந்துள்ளதுள்ளதாக கணக்கெடுக்கப்பட்டு அரசிற்கு அறிக்கை அனுப்பி நிவாரணம் பெற்று வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதில் வாழை மரங்கள் குளித்தலை பகுதியில் 363 ஹெக்டேர் பரப்பிலும், தோகைமலை பகுதியில் 45 ஹெக்டேர் பரப்பிலும், கிருஷ்ணராயபுரம் பகுதியில் 10 ஹெக்டேர் பரப்பிலும் பாதிக்கப்பட்டள்ளது. அரவக்குறிச்சி பகுதியில் 8 ஹெக்டேர் பரப்பிலான முருங்கை மரங்களும், கடவூர் மற்றும் தோகைமலைப்பகுதியில் 7 ஹெக்டேர் பரப்பிலான மரவள்ளி பயிர்களும் சேதமடைந்துள்ளதாக இதுவரை கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி ம.கீதா, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.சூர்யபிரகாஷ், வருவாய் கோட்டாட்சியர் திரு.லியாகத் (குளித்தலை), சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி மீனாட்சி, வட்டாட்சியர் திருமதி கற்பகம் (கடவூர்), கூட்டுறவு சங்க பிரதிநிதிகள் திரு.திருவிக, திரு.கிரு'ணன், திரு.செல்வராஜ், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**